## அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு அண்ணா பதக்கம்

First Published : 12 Sep 2010 09:00:25 AM IST

காஞ்சிபுரம், செப். 11: நெல், நிலக்கடலை, உளுந்து ஆகிய பயிர்களில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு அண்ணா பதக்கம் வழங்கப்பட உள்ளது.

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. இந்நிலையில் விவசாயிகள் தங்கள் விளை நிலங்களை ரியல் எஸ்டேட் அதிபர்கள் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்களிடம் விற்று வருகின்றனர்.

÷விவசாயிகளை ஊக்குவிக்க விவசாயத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் போன்ற திட்டங்கள் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன. மணிலாவுக்கு மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுகிறது.

÷இந் நிலையில் நெல், நிலக்கடலை, உளுந்து பயிர் செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு போட்டிகள் நடத்தி அண்ணா பதக்கம் வழங்கப்பட உள்ளன.

÷இது குறித்து விவசாயத்துறை இணை இயக்குநர் ராமலிங்கம் கூறியது: 2010-11-ம் ஆண்டு வேளாண்மை துறையின் மூலம் பயிர் விளைச்சல் போட்டிகள், நெல், நிலக்கடலை மற்றும் உளுந்து பயிற்களில் நடத்தப்படும். அதில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளை கெப்ரவப்படுத்தும் வகையில் அண்ணா பதக்கமும், பரிசுத் தொகையும் வழங்கப்படும் என்றார்.

## "பயிர்க் காப்பீடு அவசியம்'

First Published : 12 Sep 2010 12:41:53 PM IST

கரூர், செப். 11: பயிர்களை காப்பீடு செய்வது அவசியம் என்றார் கரூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கு.பா. ஜெயந்தி.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேளாண்மை நமது நாட்டின் பெரும்பான்மையான மக்களின் முக்கியத் தொழிலாகவும், வாழ்வாதாரமாகவும் விளங்கி வருகிறது. இருப்பினும், இயற்கைச் சீற்றங்கள், பூச்சி, நோய்த் தாக்குதல் போன்ற காரணங்களால் விவசாயிகள் விவசாயத் தொழிலில் அச்சம் கொண்டுள்ளனர். அந்த அச்சத்தைப் போக்கும் வகையில், வேளாண்மைத் துறை, தேசிய வேளாண்மை பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், பயிர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

கரூர் வட்டாரத்தில் நெல் சம்பா பருவம், வாழை பயிர்களுக்கு நிகழ் ஆண்டுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் இயற்கைச் சீற்றம், பூச்சி, நோய்த் தாக்குதல் போன்ற காரணிகளால் ஏற்படும் பண இழப்பை அரசு காப்பீட்டு பணமாக அளிக்கிறது.

விதைத்த அல்லது நட்ட ஒரு மாதத்துக்குள்ளாகவோ அல்லது டிசம்பர் 15-ம் தேதிக்கு முன்னதாகவோ தங்களது காப்பீட்டு விண்ணப்பங்கள் சென்றடைய வேண்டும்.

சம்பா நெல் பயிருக்கு ஏக்கருக்கான காப்பீட்டுத் தொகை | 13,024 ஆகும். இதற்கான பிரிமிய தொகை | 260. இதில் 50 சதம் மானியம் பெரு விவசாயிகளுக்கும், 55 சதம் மானியம் சிறு, குறு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.

எனவே ஏக்கருக்கு பெரு விவசாயிகள் கட்ட வேண்டிய பிரிமிய தொகை | 130 ஆகும். சிறு, குறு விவசாயிகள் கட்ட வேண்டிய பிரிமிய தொகை | 117ஆகும்.

எனவே, கரூர் வட்டார விவசாயிகள் வெண்ணெய்மலை, வேலாயுதம்பாளையம், வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம் என்றார் அவர்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தல்**

First Published : 12 Sep 2010 11:51:28 AM IST

நாமக்கல், செப். 11: பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

÷நாமக்கல்லில் சனிக்கிழமை நடந்த சங்கத்தின் மாநிலக் குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநிலத் தலைவர் கே. முகமது அலி தலைமை வகித்தார். பொதுச் செயலர் ஏ.எம். முனுசாமி கோரிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினார். தருமபுரி,

நாமக்கல், ஈரோடு, சேலம், திண்டுக்கல், திருச்சி, திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்த கொண்டு ஆலோசனை நடத்தினர்.

÷ பின்னர், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

பால் கொள்முதல் விலையை உயர்த்த பால் உற்பத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பால் கொள்முதல் விலையை பசும் பால் லிட்டருக்கு | 5-ம், எருமைப்பால் லிட்டருக்கு | 8-ம் உயர்த்தி வழங்க வேண்டும்.

÷ பிற மாநிலங்களில் வழங்குவதைப் போன்று உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு லிட்டருக்கு | 2 மானியம் வழங்க வேண்டும். நலிவடைந்த நிலையில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களை பாதுகாக்க பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் 40 காசுகளுடன், தமிழக அரசும் லிட்டருக்கு | 1 வழங்க வேண்டும்.

÷ ஆரம்ப கூட்டுறவு சங்கப் பணியாளர்களை ஆவின் பணியாளர்களாக நிரந்தரப்படுத்த வேண்டும். ஆவின் கால்நடைத் தீவன உற்பத்தியை அதிகப்படுத்தி 50 சத மானிய விலையில் வழங்க வேண்டும். கறவை மாடுகள் வாங்க மானியத்துடன் கடன் வழங்க வேண்டும். பால் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டும். இக் கோரிக்கைகளுக்கு தீர்வு காண பால் நிறுத்தப் போராட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கோழிப் பண்ணையாளர் சங்க மகாசபை கூட்டம்**

First Published : 12 Sep 2010 11:51:54 AM IST

நாமக்கல், செப். 11: தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்க மகா சபைக் கூட்டம் நாமக்கல்லில் செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

÷நாமக்கல்-திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெறும் இக் கூட்டத்துக்கு சங்கத் தலைவர் ஆர். நல்லதம்பி தலைமை வகிக்கிறார். தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல தலைவர் பி. செல்வராஜ் முன்னிலை வகிக்கிறார். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சி. சந்திரஹாசன், பேராசிரியர் டி. சந்திரசேகரன் மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் சங்க நிர்வாகிகள், பண்ணையாளர்கள் என பலர் பங்கேற்கவுள்ளனர்.

**பயிருக்கு இன்சூரன்ஸ் திட்டம்**

First Published : 12 Sep 2010 11:48:36 AM IST

திருச்செங்கோடு, செப். 11: தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்கள் பயிர்களை காப்பீடு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குனர் ராதாமணி கூறியது: தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் திருச்செங்கோடு மற்றும் மொளசி பிர்க்காவில் உள்ள அனைத்து மானாவாரி நிலக்கடலை பயிர் செய்துள்ள விவசாயிகளும் தங்கள் பயிரை காப்பீடு செய்து கொள்ளலாம்.

காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி செப்டம்பர் 15 ஆகும். ஆகவே ஆர்வமுள்ள அனைத்து விவசாயிகளும் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி உரிய விண்ணப்பம் மற்றும் தகவல்களைப் பெற்று அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உரிய தொகையினை செலுத்தி நிலக்கடலை பயிருக்கு இன்சூரன்ஸ் செய்து கொள்ளலாம் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு விழிப்புணர்வு பயிற்சி**

First Published : 12 Sep 2010 08:54:09 AM IST

விழுப்புரம், செப். 11: அஸ்காட் திட்டத்தின் மூலம் விழுப்புரம் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடைபெற்றது.

÷கால்நடைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்கள், அதைத் தடுக்கும் முறைகள் பற்றி முகாமில் எடுத்துரைக்கப்பட்டது.

÷முகாமுக்கு மண்டல இணை இயக்குநர் ஆர்.சண்முகபாரதி தலைமை தாங்கினார். உதவி இயக்குநர் பி.துரைராஜன், கால்நடை மருத்துவர் பி.மோகன், கால்நடை நோய் புலனாய்வுப்பிரிவு உதவி மருத்துவர் சி.எஸ்.ராஜாசிதம்பரம், விக்கிரவாண்டி கால்நடை மருந்தக உதவி மருத்துவர் எஸ்.குருவையா, நடமாடும் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் கி. மகேந்திரன், கோலியனூர் உதவி மருத்துவர் தா.மோ.சாந்தி ஆகியோர் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்தும், தடுக்கும் முறைகள் குறித்தும் பயிற்சியளித்தனர்.

÷மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**துல்லிய பண்ணைய உரங்கள் வழங்கும் விழா**

First Published : 12 Sep 2010 08:53:52 AM IST

விழுப்புரம், செப். 11: தோட்டக்கலைத் துறை சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணையத்துக்கான நீரில் கரையும் உரங்கள் வழங்கும் விழா கோலியனூர் ஒன்றிய கூட்ட அரங்கில் நடைபெற்றது.

÷விழாவுக்கு மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் என்.பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். உதவி இயக்குநர் க.வீராசாமி வரவேற்றார். கோலியனூர் ஒன்றியக் குழுத் தலைவர் பிரசன்னதேவி செல்வகுமார் அரசின் நலத்திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கிப் பேசினார்.

÷இதில் பிடாகம் கிராம அய்யன் திருவள்ளுவர் துல்லிய பண்ணையத்தைச் சேர்ந்த, 20 ஹெக்டேர் பரப்பளவில் காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ரூ.6 லட்சம் மதிப்பில் கரையும் உரங்கள் 6,196 கிலோ வழங்கப்பட்டன.

÷விழாவில் சாலாமேடு கிளை யூனியன் வங்கி கள அலுவலர் என்.ஜெயப்பிரகாஷ், பண்ணைய சங்க தலைவர் தண்டபாணி, தோட்டக்கலை உதவி அலுவலர்கள் ரமேஷ், ப. பரமசிவம் மற்றும் பிடாகம், செங்காடு, வடுகநாதகுப்பம், கோலியனூர் பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கடலூரில் சூறைக் காற்றுடன் மழை: வாழை மரங்கள் சேதம்**

First Published : 13 Sep 2010 12:11:01 AM IST



கடலூரை அடுத்த வழிசோதனைபாளையத்தில் சனிக்கிழமை இரவு சூறைக்காற்றுடன் பெய்த மழையால் சாய்ந்த வாழை மரங்கள்.

கடலூர்,செப்.12: கடலூரில் சனிக்கிழமை இரவு சூறைக் காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் வாழை மரங்கள் சேதம் அடைந்தன; மின் கம்பங்கள் சாய்ந்தன. இரவில் மின் விநியோகம் தடைபட்டது.

கடந்த 2 மாதங்களாக கடலூர் மாவட்டத்தில் அவ்வப்போது நல்ல மழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக சனிக்கிழமை இரவும் கனமழை பெய்தது. இரவு 10 மணிக்கு மேல் பலத்த காற்றுடன் மழை பெய்யத் தொடங்கியது. இரவு 12 மணி வரை சூறைக்காற்று, இடி மின்னலுடன் இடைவிடாது மழை கொட்டித் தீர்த்தது.

இதனால் 2 மணி நேரத்துக்கும் மேலாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

சூறாவளிக் காற்று காரணமாக ராமாபுரம், புதூர், வழிசோதனைபாளையம், சாத்தங்குப்பம், காட்டுப்பாளை, ஒதியடிக்குப்பம், கொடுக்கம்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில் அறுவடைக்குத் தயாராக இருந்த ஏராளமான வாழை மரங்கள் சாய்ந்தன.

மொத்தம் 50 ஏக்கரில் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் சேதம் அடைந்திருப்பதாக ராமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் ஞானசேகரன் தெரிவித்தார். நெல்லிக்குப்பம், பட்டாம்பாக்கம் பகுதிகளில் 50 ஏக்கரில் கரும்பு பயிர் சாய்ந்து விட்டதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். கடலூர் வண்டிப்பாளையம், அம்பேத்கர் நகர் உள்ளிட்ட பகுதிகளில் 10-க்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் உடைந்து விழுந்தன.

இதனால் அப்பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. நகரில் சில இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. சாலைகளில் மழைநீர் தேங்கி மீண்டும் சேறும் சகதியுமாக காட்சியளித்தது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இந்த மழை, சம்பா நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தது.

தினமலர்

**மாற்றுப்பயிர் செய்திட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,01:48 IST

சிதம்பரம்:சம்பா சாகுபடியை மட்டுமே நம்பியிருக்கும் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் காவிரி கடைமடை பகுதி விவசாயிகள் மாற்றுப்பயிர் சாகுபடியை விரும்புகின்றனர்.கடலூர் மாவட்டம், காவிரி டெல்டா கடைமடையான சிதம்பரம், காட் டுமன்னார்கோவில் பகுதியில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது.காவிரியில் தண்ணீர் திறப்பதில் தாமதம், பருவ மழை பொய்ப்பது போன்ற காரணங்களால் பல ஆண்டுகளாகவே உரிய காலங்களில் பயிர் செய்ய முடியவில்லை.அப்படியே பயிர் செய் தாலும் மழை, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங் கள் அல்லது புதிய நோய் தாக்குதலால் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

முப்போகம் நெல் சாகுபடி தற்போது சம்பா போகம் மட்டுமே விளைந் தால் போதும் என்ற நிலையில் சில ஆண்டாக சம்பா சாகுபடியும் ஏமாற்றி விடுகிறது.நெல் சாகுபடியில் ஏற்படும் இழப்பை சரி செய்யும் வகையில் நெல் அறுவடை நேரத்தில் ஊடுபயிராக விதைக்கப்படும் உளுந்து பயிரும், மூன்று ஆண்டுகளாக கை கொடுக் கவில்லை.இப்படி சம்பா சாகுபடியும் நம்ப முடியாமல், உளுந்து பயிரும் பழிவாங்குவதால் சிதம்பரம், காட்டுமன் னார்கோவில் பகுதி விவசாயிகள் வேறு வழியின்றி மாற்றுப்பயிராக எள், சோளம், கேழ்வரகு, கம்பு உள்ளிட்ட மானாவாரி பயிர் செய்யத் துவங்கியுள்ளனர்.

குமராட்சிப் பகுதியில் மட்டும் இந்த ஆண்டு 140 எக்டர் எள் பயிரிடப்பட் டுள்ளது. தற்போது புவனகிரி பகுதி விவசாயிகளும் எள் பயிர் செய்வதில் ஆர் வம் காட்டி வருகின்றனர்.லேசான மழை பெய் தாலே மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது என்பதால் ஜூன் மாதம் லேசான மழை பெய்யும் என்பதை கணக்கில் கொண்டு எள், சோளம் உள்ளிட்ட பயிர் கள் செய்யப்படுகிறது. சிதம்பரம் கொள்ளிடக்கரையொட்டி வல்லம் படுகை, குமராட்சி பகுதியில் முதல் முயற்சியாக கடந்த ஆண்டு முதல் மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல பலனை கொடுத்துள்ளது.ஜூன் மாதம் விதைக் கப்படும் மானாவாரி பயிர் மூன்று மாத (ஆகஸ்ட் மாதம்) இறுதியில் அறுவடை செய்து விடுவதால்

அடுத்து சம்பா சாகுபடியை துவக்கி விடலாம். சம்பா அறுவடை சமயத்தில் உளுந்து பயிர் செய்துவிட முடியும்.இதன் மூலம் முப்போக நெல் சாகுபடி செய்வது நின்றதால் ஏற்படும் இழப்பை மானாவாரி பயிர் செய்வதன் மூலம் ஈடு செய்திட முடியும் என் பதால், அதற்கான தொழில் நுட்பங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும். மேலும் கோடை மழையை முன் கூட்டியே தகவல் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர் பார்க்கின்றனர்.

சிதம்பரத்தில் கடந்த மாதம் 12ம் தேதி வேளாண் இணை இயக்குனர் தலைமையில் நடந்த விவசாயிகள் பயிறுவகை உற்பத்தி கருத்தரங்கில் இது தொடர் பாக விவசாயிகள் கோரிக்கைவைத் துள்ளனர்.காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் சம்பா சாகுபடியை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய நிலையில், மாற்றுப்பயிர் திட் டங்களை அரசு கொண்டு வருவதோடு நவீன சாகுபடி முறைகள், தொழில் நுட்பங்கள், பூச்சிக்கொல்லிகள் கையாள்வது குறித்து ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்தினால் இருண்டு கிடக்கும் விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற முடியும்.மழையை முன்கூட்டியே அறிய...மானாவரி பயிறு வகைகள் பயிரிட மழை தேவை என்பதால் மழை பெய்வதைமுன்கூட்டியே அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மழையை பற்றிய தகவல் அளிக்கும் இயற்கை இடர்பாடு நிர்வாக முகமை பேங்காங் நாட்டில் உள்ளது. 17 நாடுகளில் மழை வருவது குறித்து விவரங்களை இந்த முகமை அளித்து வருகிறது.மழை பெய்யும் காலம், மழையின் அளவு போன்ற விவரங்களை ஒரு மாதத்திற்கு முன்பு அந்த முகமை மூலம் அறிந்துகொள்ள முடியும் என்பதால் கடலூர் மாவட்டத்தில் மழை பெய்வதை முன்கூட்டியே அறிய, உழவர் மன்றத் தலைவர் ரவீந்திரன் உள்ளிட்ட விவசாய சங்க பிரதிநிதிகள் முயற்சியில் இறங்கியுள்ளார். அதற்கான உதவிகள், தொழில் நுட்பங்கள், ஆலோசனைகளை வழங்கி அரசு ஊக்கப்படுத்த வேண்டும்.

**மஞ்சள் ஏலம் ஒத்திவைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,04:03 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் இரவு மஞ்சள் ஏலம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது. ஆத்தூர்

புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரத்தினங்களில் சனிக்கிழமை இரவு மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. ஏலத்துக்கு ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, தம்மம்பட்டி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், பெரம்பலூர் ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள் விளைவித்த மஞ்சளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். நேற்று முன்தினம் நடக்க இருந்த மஞ்சள் ஏலத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி வெளிமாநில மஞ்சள் வியாபாரிகள் கலந்து கொள்ளவில்லை. அதனால் மஞ்சள் ஏலம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

**வேளாண் சார்ந்த தொழிலுக்கு முன்னுரிமை அவசியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:10 IST

ராசிபுரம்: ""மனித வளத்தை நன்கு பயன்படுத்தினால், நாடு முன்னேற்றம் அடையும்,'' என, முத்தாயம்மாள் கல்லூரி பட்டமளிப்பு விழாவில், கோவை வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன் பேசினார். ராசிபுரம் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது. கல்லூரி தாளாளர் ராமசுவாமி தலைமை வகித்தார். செயலாளர் முத்துவேல் முன்னிலை வகித்தார். கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன், 861 மாணவ, மாணவியருக்கு பட்டச்சான்று வழங்கி பேசியதாவது: இந்தியா சுதந்திரம் பெற்ற பின், 1950ம் ஆண்டு 30 பல்கலை மற்றும் 750 கல்லூரிகள் மட்டுமே இருந்தன. அதில் 2.50 லட்சம் பேர் உயர் கல்வி பயின்றனர். தற்போது 400க்கும் மேற்பட்ட பல்கலை மற்றும் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்லூரிகளில் 11 மில்லியன் மாணவ, மாணவியர் படிக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் கூடுதலாக உயர் கல்வி சேர்க்கை நடக்கிறது. நம் நாடு தகவல் தொழில் நுட்பவியல், உயர் தொழில் நுட்பவியல், இயந்திர அறிவியல் துறைகளில் பெரும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

ஆனால், 60 சதவீத மக்கள் சார்ந்துள்ள வேளாண் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நீர், நிலம் மற்றும் வேலையாட்கள் பற்றாக்குறை காரணமாக, விவசாயத் தொழிலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஏழ்மை இல்லாத நாடாக இருக்க உணவு உற்பத்தியை அதிகரிக்க

வேண்டும். பயோ டெக்னாலஜி துறை மூலம் மருத்துவம், வேதியியல் தொழிற்சாலை, வேளாண் சுற்றுப்புறச்சூழல் உள்ளிட்ட துறைகளில் ஆக்கப்பூர்மான முன்னேற்றம் பெற வேண்டும். 2020ம் ஆண்டில் இந்தியாவில் 3ல் 1 பங்கு இளைஞர்கள், பட்டதாரிகளாக இருப்பர். நம் நாட்டின் மனித வளத்தை நன்றாக பயன்படுத்தினால், மேலும் முன்னேற்றம் அடைவது நிச்சயம்.

இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில், உயிரியல் துறை புலமுதன்மை பேராசிரியர் சுந்தரராஜன், முதல்வர் ஸ்டெல்லா பேபி, கம்ப்யூட்டர் துறைத் தலைவர் பாலசுப்ரமணியன், 250க்கும் மேற்பட்ட கல்லூரி ஆசிரியர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் உள்பட பலர் பங்கேற்றனர்.

**நெல் நாற்றங்கால் அமைக்க அரசு மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:14 IST

பள்ளிபாளையம்: "ஆத்மா திட்டத்தின் கீழ், செம்மை நெல் நாற்றங்கால் அமைக்கும் விவசாயிக்கு மானியம் வழங்கப்படுகிறது' என, பள்ளிபாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: செம்மை நெல் சாகுபடிக்கு பாய் நாற்றங்கால் தொழில் நுட்பத்தை பின்பற்றும் விவசாயிகளுக்கு விதை, உரம் போன்ற அனைத்தும், மார்க்கர் நடவு கருவியும், கோனோவீடரும் மானிய விலையில் வழங்கப்படும். பத்து ஏக்கருக்கு நடவு செய்யத்தேவைப்படும் வாளிப்பான, பட்டையான நெல் நாற்றுகளைத் தயார் செய்யும் (பாய் நாற்றங்கால்) விவசாயிகளுக்கு 3,000 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.

பாய் நாற்றங்கால் அமைக்கும் தொழில் நுட்பம் பற்றிய செயல் விளக்கம் நிகழ்ச்சி, பள்ளிபாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தலைமையில், வெடியரசம்பாளையத்தை சேர்ந்த விவசாயி பெருமாள் வயலில் நடந்தது. 13 ஏக்கருக்கு தேவையான நெல் பாய் நாற்றங்காலில் மொத்தம் 70 கிளை மட்டுமே விதை விதைக்கப்பட்டது. அடியுரமாக மண்புழு உரம் சலித்து இடப்பட்டது. விதைத்த பின், பூவாளி மூலம் நீர் தெளிக்கப்பட்டது. வைக்கோலில் நாற்றங்கால் மூடாக்கு போடப்பட்டது. செயல்விளக்கத்துக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் செய்தனர்.

**நேரடி நெல் விதைப்பு செயல் விளக்க முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:02 IST

ஊத்தங்கரை: ஊத்தங்கரை அடுத்த தீர்த்தகிரிவலசை கிராமத்தில் விவசாயிகளுக்கான நேரடி நெல் விதைப்பு செயல் விளக்க முகாம் நடந்தது.

வேளாண்மை தொழிலில் ஆட்கள் பற்றாக்குறையில் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வேளாண்மை துறை நவீன தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்கம் மூலம் சாகுபடிபணி மேற்கொள்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகறது. குறிப்பாக நாற்றங்கால் தயாரித்தல், பராமரித்தல், நாற்றுக்களை பறித்தல், நடவு செய்தல் மற்றும் களை எடுத்தல் ஆகிய சாகுபடி தொழில் நுட்பங்களை வேளாண்மை துறை அதிகாரிகள் விவசாயிகள் தற்போது நேரடி செயல்விளக்கம் முகாம் மூலம் விளக்கி வருகின்றனர்.

ஊத்தங்கரை அடுத்த தீர்த்தகிரிவலசையில் விவசாயி காளியப்ப கவுண்டர் வயலில் நேரடி நெல் சாகுபடி செயல் விளக்க முகாம் நடந்தது. மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் புத்தர் புதிய சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். களை நிர்வாகம் பற்றி டாக்டர் தமிழ்செல்வன் எடுத்து கூறினார்.நவீன வேளாண்மையில் இயந்திரங்களின் பங்கு குறித்து வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி, வேளாண்மை அலுவலர் பன்னீர்செல்வம் ஆகியோர் விளக்கினர். வேளாண்மை துணை அலுவலர் சீனிவாசன் நன்றி கூறினார். முகாம் ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் செல்வகுமார் செய்திருந்தார். 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் முகாமில் கலந்து கொண்டனர்.

**மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:27 IST

ஈரோடு: சத்தியமங்கலத்தில், ஈரோடு வேளாண் விரிவாக்க மையத்தின் சார்பில், மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம் நடந்தது. ஈரோடு உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் ராஜேந்தினர் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் பிரசாத் வரவேற்றார். சத்தி வேளாண் உதவி இயக்குனர் முரளி, செம்மை நெல் சாகுபடி குறித்த தொழில்நுட்பங்களை விளக்கினார். ஈரோடு மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் சசிகலா மண் பரிசோதனை செய்வதன் முக்கியத்துவம், மண் மற்றும் நீர் மாதிரி எடுக்கும் முறைகள், களர் நில சீர் திருத்தம் குறித்து பேசினார்.

**"ஜெட்' வேகத்தில் உயர்ந்த கதளி, செவ்வாழைத்தார் விலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:29 IST

கோபிசெட்டிபாளையம்: தொடர் பண்டிகைகளால் கதளி மற்றும் செவ்வாழைத் தார் விலை "ஜெட்' வேகத்தில் அதிகரித்துள்ளது. "ஆடி மாதம் பிறந்தால் பண்டிகைகள் அடுத்தடுத்து வரும்' என்கிற பழமொழி உண்டு. ஆகஸ்ட் மாதம் கேரளாவில் முக்கிய திருவிழாவான ஓணம் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. இதனால், கதளி வாழை கிலோ 30 ரூபாயை தாண்டியது. செவ்வாழை மற்றும் நேந்திரம் வாழைத்தார்களின் விலையும் சரசரவென உயர்ந்தது. நடப்பு வாரம் விநாயகர் சதுர்த்தி மற்றும் ரமலான் திருவிழாக்கள் அடுத்தடுத்து வந்ததால், வாழைப் பழங்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. இதனால், அனைத்து ரக வாழைத் தார்களுக்கும் கூடுதல் விலை விவசாயிகளுக்கு கிடைத்தது. கோபி வேளாண் உற்பத்தியாளர் சங்கத்துக்கு நேற்று 6,500 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன.

கதளி கிலோ 32.50 ரூபாய், நேந்திரம் 29 ரூபாய்க்கு விற்றது. செவ்வாழைத் தார் அதிகபட்சமாக 510 ரூபாய்க்கும், பூவன் 275 ரூபாய், ரஸ்தாளி 400 ரூபாய், ரோபெஸ்ட்டா 285 ரூபாய், மொந்தன் 240 ரூபாய், பச்சைநாடா 225 ரூபாய் விற்றது. நடப்பு வாரம் ஆறு லட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் வாழைத்தார் வர்த்தகம் நடந்தது. தேங்காய் 4,000 காய்கள் விற்பனைக்கு வந்தது. அதிகப்பட்சமாக தேங்காய் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 4.50 ரூபாய்க்கும் விற்றது. 18 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய்

வர்த்தகம் நடந்தது. வரும் மாதங்களில் ஆயுத பூஜை, தீபாவளி, கார்த்திகை தீபம் உள்ளிட்ட திருவிழாக்கள் அடுத்தடுத்து வர உள்ளதால், வாழைத்தார்களின் விலை மேலும் உயர வாய்ப்புண்டு என, வாழை வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மானிய விலையில்சான்று விதை அளிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:21 IST

கரூர்: "கரூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் 2010-11ம் ஆண்டுக்கான வேளாண் இடுபொருள் விநியோகம் நடக்கிறது' என, வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயந்தி அறிவித்துள்ளார்.அறிக்கையில் உள்ளதாவது: நெல் நடவுப்பணி துவங்கும் வேளையில், கரூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் வெண்ணெய்மலை மற்றும் வேலாயுதம்பாளையம் மையங்களில் நெல் ரகம் ஐ.ஆர்.20 மற்றும் நிலக்கடலை டி.எம்.வி.2 சான்று விதை , சூடோமோனாஸ், ஜிப்சம் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. கரூர் வட்டார விவசாயிகள் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**கால்நடை தீவன பயிர் பற்றாக்குறை : க.பரமத்தியில் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2010,03:05 IST

க.பரமத்தி: பருவமழை சரிவர பெய்யாததால் க.பரமத்தி யூனியன் பகுதியில் கால்நடைக்கு தீவனம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. க.பரமத்தி யூனியன், கரூர் மாவட்டத்தில் மிகவும் வறட்சியான பகுதியாக உள்ளது. இங்கு கிரஷர் மற்றும் ஜல்லி தொழிலுக்கு அடுத்தப்படியாக, கால்நடைகளை நம்பியே மக்கள் வாழ்கின்றனர். ஆயிரக்கணக்கான கால்நடைகளே இப்பகுதி விவசாயிகளுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. ஆண்டு தோறும் ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் பருவமழை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் பெய்யும் மழையில் தீவன பயிர் வளர்க்கப்படுகிறது. ஆகஸ்ட் அறுவடை ஏற்கனவே பற்றாக்குறை மழை காரணமாக பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், மழை இல்லாமல் கால்நடைகளுக்கு கடலைகொடி, சோளத்தட்டு போன்ற பயிர்களை விலைக்கு வாங்கி கால்நடைகளுக்கு தீவனம் அளிக்க வேண்டியுள்ளது.

இவற்றின் விலையும் பலமடங்கு உயர்ந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். அடுத்து வரும் பருவமழையாவது தங்களுக்க கைகொடுக்குமா? என்று எதிர்பார்த்துள்ளனர்.

**தோட்டக்கலைத்துறை மூலம் தொழில்நுட்ப திட்டப்பணிகள் பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:07 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் விஜயகுமார் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் 2010-2011ம் ஆண்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய மூங்கில் சாகுபடி இயக்கம், நுண்ணீர் பாசனத்திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம், துல்லிய பண்ணையம் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் உயர்ரக மற்றும் வீரிய ரக காய்கறி விதை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 0.5 ஹெக்டர் பரப்புக்கு மானியம் வழங்கப்படும். 98.808 லட்சம் ரூபாய்க்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலமும், 92 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேசிய மூங்கில் சாகுபடி இயக்கமும், நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தில் 7,500 ரூபாயும், துல்லிய பண்ணையம் திட்டத்தின் கீழ் 89 லட்சம் ரூபாய்க்கும் மானியம் வழங்கப்படும். விபரங்களுக்கு துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அந்தந்த பகுதி வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் வேளாண் உதவி அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம். இவ்வாய்ப்பை பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் இத்திட்டங்களில் பங்குபெற்று பயன்பெறலாம்.

**மதுரையில் சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் ,மண்வளம் பெருக்கும் கொழிஞ்சி பயிரிடல் தயார்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,02:44 IST

சத்திரப்பட்டி: மதுரை மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர். இதற்காக, மண்வளம் பெருக்கும் தழைச்சத்து மிக்க கொழிஞ்சி செடிகளை மானாவாரியாக பயிரிட்டுள்ளனர். பாசன வசதிக்காக பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதும், விவசாயப் பணிகள் துவக்கப்படவுள்ளன. மதுரையில் பருவமழை பொய்த்ததால், குறுவை சாகுபடிக்கு தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால், குறுவை சாகுபடி பொய்த்தது. அடுத்ததாக சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர். செம்மை நெல் சாகுபடிக்காக விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசு சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. மதுரை மேற்கு வட்டாரத்தில் மட்டும் இந்தாண்டு 3,100 எக்டேர் நிலத்தில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதற்காக "ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின்' கீழ் ஏக்கருக்கு 3,000 ரூபாயும், "தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்' கீழ் எக்டேர் ஒன்றுக்கு 3,000 ரூபாயும், "ஆத்மா' திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு 3,000 ரூபாயும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடையும் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தழைச்சத்து மிக்க கொழிஞ்சி: சம்பா சாகுபடிக்காக, மண்வளம் பெருக்கும் தழைச்சத்து மிக்க, கொழிஞ்சி செடிகளை மானாவாரியாக பயிரிட்டுள்ளனர். கொழிஞ்சி விதைகளை ஒருமுறை தூவினால் போதும், அதுவே முளைத்து அதிகபட்சம் ஒன்றரை அடி உயரம் வரை வளரும். விவசாயத்திற்காக நிலத்தை உழவடை செய்யும்போது செடியையும் சேர்த்து உழுவர். தண்ணீரில் ஊறிய செடிகள், மண்வளத்தைப் பெருக்கும் தழைச்சத்து மிக்கதாக உருவாகும்.
விதைகளுடன் செடிகளை உழவடை செய்வதால், நெல் சாகுபடி முடிந்ததும் மீண்டும் முளைக்கும். இப்படி, ஒருமுறை கொழிஞ்சி விதைகளை நிலத்தில் மானாவாரியாக விதைப்பதால், வாழையடி வாழையாக நிலத்தில் விளையும் கொழிஞ்சி மண்வளத்தை காத்து நிற்கிறது. விவசாயிகள் தயார்: பாசன வசதிக்காக பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதும், செம்மை நெல் சாகுபடியை துவக்க விவசாயிகள்

ஆர்வமாக உள்ளனர். விவசாயத்திற்கு தேவையான உரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மழை, ஓரளவு பெய்வதால், சம்பா சாகுபடிக்காக பெரியாறு அணையில் இருந்து விரைவில் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது.

**பாசிப்பயறு விதைத்து பயன்பெற யோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,02:42 IST

மதுரை: கள்ளிக்குடி வட்டாரம் மொச்சிக்குளம் கிராமத்தில் மூன்று ஏக்கர் பரப்பளவில் பாசிப்பயறு விதைப் பண்ணை அமைக்கப்பட்டு உள்ளது. விவசாயி மலையாளம் கூறுகையில், ""கள்ளிக்குடி வட்டார விவசாய விரிவாக்க மையம் மூலம் கடந்த ஜூலையில் கோ 6 என்ற ரக பாசிப்பயறு பெற்று, விதைப் பண்ணை அமைத்தேன். தற்போது 65 நாள் ஆகிவிட்ட நிலையில் பாசிப்பயறு அறுவடைக்கு தயாராகிவிட்டது," என்றார்.

விதைப் பண்ணையை பார்வையிட்ட மாவட்ட இணைஇயக்குனர் சங்கரலிங்கம், துணைஇயக்குனர் சம்பத்குமார் கூறுகையில், "" திரட்சியான காய்கள் கொண்ட இந்த மூன்று ஏக்கர் விதைப் பண்ணை மூலம் ஏக்கருக்கு 450 கிலோ முதல் 500 கிலோ வரை பாசிப்பயறு கிடைக்கும். இதனால் மூன்று ஏக்கரில் 15 குவிண்டால் அளவுக்கு மகசூல் பெற இயலும்," என்றனர். இதனால் விவசாயிகள் குறுகிய காலத்தில் கூடுதல் பலன்பெற பாசிப்பயறு சாகுபடியை மேற்கொள்ளலாம் என உதவி இயக்குனர் சாரநாத்பாபு தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2010,23:44 IST

தேனி:பெரியகுளம் தோட்டக் கலை கல்லூரி மாணவர்கள் போடி பூதிப்புரத்தில் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு செவ்வழுகல் நோய் வரும் முன் கட்டுப்படுத் தும் செயல்முறையினை செய்து காண்பித்தனர். விவசாயிகளுக்கு ஆலோசனைகளையும் வழங்கினர்.

**கூட்டுறவில் விதை விற்பனையால் வெளிமார்க்கெட்டில் விலை குறைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 10,2010,22:26 IST

விருதுநகர் : மாவட்டத்தில் உள்ள தொடக்க கூட்டுறவு சங்கங் களில் மக்காச்சோளம், சோளம், கம்பு விதைகள் விற்பனை செய்யப்படுவதால் வெளி மார்க்கெட்டில் விலை குறைக்கப்பட்டுள்ளது.
130 தொடக்க கூட்டுறவு சங்கங்களில் விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதில் மக்காசோள விதைகளின் வகைகளில் ஹெசெல் 3.50 கிலோ ரூ.473.50 காசு, எம்கே 4 வகை கிலோ ரூ.712, என்கோ 3.600 கிலோ ரூ.629.50 காசு, என்கோ 30 வகை 5 கிலோ ரூ.702, என்கே 21 வகை 3.600 கிலோ ரூ.629.50 காசு, காவேரி வகை 4 கிலோ ரூ.832.50 காசு, ஹைகோ 5 கிலோ ரூ.640, பி.எச்.என். 5 கிலோ ரூ.616 க்கும், கம்பு 80 வகை, 1.50 கிலோ ரூ.280.50 காசு, வெள்ளைச் சோளம் 3 கிலோ ரூ.387க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
இதில் மானாவாரி பயிர்கள் பயிரிடுவதற்கான பட்டம் துவங்கியிருப்பதால் இந்நேரத்தில் தனியார் உரக்கடைகளில் விதை விற்பனை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும்.

தொடக்க கூட்டுறவு சங்கங்களில் 16 டன் விதைகள் இறக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் வெளிமார்க்கெட்டுகளில் விற்பனை விலை குறைக்கப்பட்டுள் ளது. கூட்டுறவு இணைப்பதிவாளர் ரவிக்குமார் கூறுகையில், "தொடக்க கூட்டுறவு சங்கங்களில் 16 டன் விதைகள் இறக்குமதி செய் யப்பட்டு விற்கப்பட்டு வருகின்றன,' என்றார்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் சம்பா பருவ நாற்று விற்பனை**

செப்டம்பர் 13,2010,00:00 IST

காரைக்கால்:காரைக்காலில் சம்பா பருவத் தில் ஆடுதுறை-38, ஆடுதுறை - 46 ரகங்களை பயிரிட வசதியாக வேளாண் அறிவியல் நிலையம் நாற்று தயாரித்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:காரைக்கால் மாவட்ட விவசாயிகள் சம்பா பருவத்தில் நெல் பயிர் செய்ய

ஏற்ற வகையில் இந்த ஆண்டு காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் சம்பா பட்டத்திற்கு ஏற்ற ஆடுதுறை - 38 மற்றும் ஆடுதுறை - 46 நெல் நாற்றுக்கள் தயாரித்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகள் முன்பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் ளப்படுகிறார்கள்.

விவசாயியின் பெயர், முகவரி, நாற்றங்கால் தேவை, தொலைபேசி விவரங்களுடன் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுக வேண்டும். முன் பணமாக நாற்றங்கால் விலையில் பாதி வசூலிக்கப்படும். ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு150 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட் டுள்ளது.இதில் பாதி தொகையை 75 ரூபாய் (ஒரு சென்ட்டுக்கு) செலுத்த வேண்டும். நாற்றுக்கள் பறித்து செல்லும் சமயம் மீதி தொகையை செலுத்த வேண்டும். மேலும் வேளாண் துறை, உழவர் உதவியகங்கள் மூலமாகவும் தொடர்பு கொள் ளலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

***விவசாயிகள் சங்கத்தினர் தர்ணா போராட்டம் நாளை நடக்கிறது***

*கொழிஞ்சாம்பாறை, செப்.13–*

*சித்தூர் தாலுகா விவசாயிகள் சங்கம் சார்பில் தர்ணா போராட்டம் நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு எக்சைஸ் சர்க்கிள் அலுவலகம் முன் நடக்கிறது. தென்னை விவசாயிகளையும், கள் இறக்கும் தொழிலாளர்களையும் வஞ்சிக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த தர்ணா போராட்டம் நடத்தப்படுகிறது.*

*இதில் அனைத்து விவசாயிகளும், பொது மக்களும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*